# பண்பாடு
# PANPADU

மலர் : 19 இதழ் : 03 மார்கழி : 2010

இதழ் : 40

- விஜய நகர நாயக்கர் காலத்தில் முருக வழிபாடு.
- 'வித்துவசிரோமணி' கணேசையரின் உரைவன்மை - ஒரு நோக்கு.
- அத்துவைத மரபில் தத்துவராயர்.
- மலையகப் பெண்கள் குடும்ப ரீதியாக எதிர்கொள்ளும் பிரச்சினைகள்.
- சைவசமயம் - அடிப்படைத் தத்துவங்கள்.



இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

பதிப்பு : மார்கழி 2010
விலை : ரூபா. 50/-

# நாற்பதாவது இதழின் கட்டுரையாளர்கள்

***சைவப்புலவர் சு. துஷ்யந்***
இவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அழகியற்துறை பட்டதாரி. இந்து நாகரீகம், தமிழ் இலக்கியம் தொடர்பாக ஆழ்ந்த புலமையும், அறிவாற்றலும் கொண்டவர். இவைகள் தொடர்பாக ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வருவதுடன் ஆய்வரங்குகளிலும் பங்கு கொண்டுள்ளார்.

***திரு. ஸ்ரீ. பிரசாந்தன்***
இவர் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றுகின்றார். ஆய்வுகளில் முனைப்புடன் ஈடுபடும் இளம் ஆய்வாளர்களில் இவரும் ஒருவர். தமிழ், சமயம் சார்ந்த பல கட்டுரைகளை எழுதியுள்ளதுடன் ஆய்வரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்டமேற்படிப்பினை தற்பொழுது மேற்க் கொண்டு வருகின்றார்.

***கலாநிதி கிருஷ்ணவேணி நோபேர்ட்***
இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் ஆவார். அழகியற் கோட்பாடுகள் தொடர்பாக ஆழ்ந்த புலமை மிக்க இவர் ஆய்வரங்குகளில் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றைச் சமர்ப்பித்துள்ளார்.

***திருமதி. ஸாதியா பௌசர்***
இவர் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மொழித்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றார்.

***வாகீசகலாநிதி. கனகசபாபதி நாகேஸ்வரன் எம். ஏ.***
இவர் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஆவார். சிறந்த சமய சொற்பொழிவாளர். இவர் தமிழ்மொழி, இலக்கியம் தொடர்பான பல ஆய்வுக் கட்டுரைகளை பல ஆய்வரங்குகளில் சமர்ப்பித்துள்ளார்.

பண்பாடு பருவ இதழில் பிரசுரமாகியுள்ள கட்டுரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் யாவும் அக்கட்டுரைகளை எழுதியவர்களின் சொந்தக் கருத்துக்களாகும். இவை இவ்விதழை வெளியிடும் திணைக்களத்தின் கருத்துக்களைப் பிரதிபலிப்பனவாகா.

- ஆசிரியர் -

# பண்பாடு

சமூக கலை இலக்கிய ஆய்வுச் சஞ்சிகை

மலர் : 19 இதழ் : 03 மார்கழி : 2010



நிர்வாக ஆசிரியர்

திருமதி. சாந்தி நாவுக்கரசன்

ஆசிரியர் குழு

திரு. க. இரகுபரன்

திரு. ஸ்ரீபிரசாந்தன்

திரு. எம். சண்முகநாதன்

திருமதி. தேவகுமாரி ஹரன்

ஆலோசனைக் குழு

பேராசிரியர். சி. பத்மநாதன்

பேராசிரியர். கா. சிவத்தம்பி

பேராசிரியர். எஸ். சுசீந்திரராஜா

பேராசிரியர். வி. சிவசாமி



வெளியீடு:

இந்துசமய,

கலாசார அலுவல்கள்

திணைக்களம்

இல. 248 - 1/1,

காலி வீதி,

கொழும்பு - 04.


*அட்டைப்படம்*

**ஆனோல்ட் சதாசிவம்பிள்ளை (11-10-1820 - 20-02-1896)**

தமிழ்ச் சூழலில் பத்திரிகைத்துறை தோன்றி வளர்ச்சியடையத் தொடங்கிய காலத்தில் வெளிவந்த தமிழ்ப் பத்திரிகைகளுள் ஒன்றான 'உதயதாரகை' பத்திரிகையின் ஆசிரியராக விளங்கிய வகையாலும் 'பாவலர் சரித்திர தீபகம்' எனும் நூலின் ஆசிரியர் என்ற வகையாலும் பெரும் புகழைத் தனதாக்கிக் கொண்டவர் ஆனோல்ட் சதாசிவம் பிள்ளையவர்கள். சைவராகப் பிறந்த சதாசிவம்பிள்ளை 'வட்டுக்கோட்டைச் செமினறி' யிற் சேர்ந்து கல்விகற்ற காலத்தில் கிறிஸ்தவராகி ஜே.ஆர். ஆனோல்ட் என்னும் நாமம் பூண்டார். அங்கு கற்று வெளியேறிய சதாசிவம்பிள்ளை மானிப்பாய், சாவகச்சேரி, உடுவில் ஆகிய இடங்களில் விளங்கிய கல்விச் சாலைகளிலும் பின் தான் கற்ற செமினறியிலும் நல்ல ஆசிரியராகத் திகழ்ந்தார். பைபிள் மொழிபெயர்ப்புக்காக இலங்கையிலிருந்து தமிழகம் சென்ற பேர்சிவல் பாதிரியார், ஆறுமுகநாவலர் முதலான பெருமக்கள் அடங்கிய குழுவில் தானும் ஒருவராக விளங்கியமை இவர்தம் பெருமைக்கோர் சான்று. அக்காலத்தில் செல்வாக்கு மிக்க பத்திரிகையாக விளங்கிய 'உதயதாரகை'க்கு நெடுங்காலம் (40 வருடம்) ஆசிரியராக விளங்கி பல்வேறு விடயதானங்களை வழங்கியதோடு அறிஞர்பலர் தமிழ் இலக்கியம், இலக்கணம் சம்பந்தமாக தத்தம் கருத்துக்களை முன்வைப்பதற்கான களத்தினையும் அமைத்துக் கொடுத்தார்.

இவர் எழுதிய 'பாவலர் சரித்திர தீபகமே' தமிழில் தோன்றிய முதலாவது புலவர் சரித நூல் என்ற பெருமைக்குரியது. அது அதற்குமுன் ஈழத்தறிஞர் ஒருவரால் எழுதப்பட்ட 'தமிழ்ப் புளூட்டக்' என்ற ஆங்கில நூலை அடியொற்றி எழுதப்பட்டதாயினும் அதிலடங்காத பல புலவர்களினதும் நூல்களினதும் விவரங்களைத் தருவது. 'பாவலர் சரித்திர தீபகம்' தவிர வான சாஸ்திரம், சாதாரண இதிகாசம், நன்னெறிக்கதா சங்கிரகம், குடும்ப தருப்பணம் வேறும் பல வசன நூல்களையும் மெய்வேத சாரம், திருச்சதகம், நன்னெறிமாலை, இல்லற நொண்டி, கீர்த்தனா சங்கிரகம், வெல்லையந்தாதி, நன்னெறிக் கொத்து முதலான செய்யுள் நூல்களையும் எழுதி அச்சிட்டு வெளியிட்டார்.

# அத்துவைத மரபில் தத்துவராயர்

கலாநிதி கிருஷ்ணவேணி நோபேர்ட்

அத்துவைதம் என்பது பொதுவாகச் சங்கரரது தத்துவத்தைக் குறிக்க வழங்கும் சொல்லாகும். அத்துவைதத்திற்குத் தமிழ் மொழியில் இலக்கியம் ஏற்படுத்திய மூல காரணராகத் தத்துவராயரைக் கொள்ளலாம். பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிக்காலப் பகுதியைச் சேர்ந்த இவர் தமிழ் நாட்டு இலக்கிய கலை வரலாற்றிலும், மிகவும் குறிப் பிடக்கூடிய இடத்தைப் பெறுகின்றார். தமிழ் நாட்டில் வடமொழியில் மட்டும் அறியப்பட்டிருந்த வேதாந்த தத்துவத்தைத் தமிழ் மொழியில் இலக்கியத்துக்குள் கொண்டுவந்த சிறப்பு இவருக்குரியது. தத்துவராயர் பக்தி மரபில் நின்று ஆதிசங்கரரின் அத்துவைத வேதாந்தத் தைப் பாடியுள்ளார். சிவன் நாராயணன் என்ற இருவரும் ஒருவரே என்று அத்துவைதம் பேசுவதுடன் சாதிமேலாதிக்கமும் சாதிப்பூசல் களும் நிறைந்த அக்காலச் சமூக அமைப்பில் சாதிவேறுபாடின்றி அனைவரும் ஒன்று என்று அத்துவைதம் பேசிப் பொது மக்கள் அத்து வைதத்திற்குத் தத்துவராயர் புதிய பரிணா மத்தைத் தந்துள்ளார். இக்கருத்துக்களை இவரது நூல்களின் அடிப்படையில் ஆய்வு செய்தல் வேண்டும். தத்துவராயர் பாடிய நூல்கள் பல்வேறு இலக்கிய வகைகளைக் கொண்டவை. அடங்கல் முறை என்பதில் மரபு வழியான 18 சிற்றிலக்கியங்கள் உள்ளன. பாடு துறையில் 138 தலைப்புக்களில் 1140 பாடல்கள் உள்ளன. தத்துவாமிர்த்தம், சிவப்பிரகாச வெண்பா, ஈஸ்வர கீதை, பிரம்ம கீதை என்பன தனித்தனியே செய்த நூல்கள் ஆகும். பொதுவாக இந்நூல்களின் அடிப் படையிலும், சிறப்பாகப் பாடுதுறை அடிப்படை யிலும் தத்துவராயரது அத்துவைதக் கொள் கையை வெளிக்கொணர்வது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

### *தத்துவராயரது காலப் பின்னணி*

தமிழக வரலாற்றில் கி.பி. 1300-1650 வரை யுள்ள காலப்பகுதி விஜயநகர நாயக்கர் காலம் என்று அழைக்கப்படுகிறது. விஜயநகர மன்னர்களது ஆட்சியின் கீழ் மதுரை, செஞ்சி, தஞ்சாவூர் போன்ற இடங்களில் நாயக்க மன்னர்கள் சிற்றரசர்களாக இருந்தனர். இக் காலப்பகுதியில் டெல்கி சுல்த்தான்களின் படை யெடுப்புக்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. மதங்களிடையே போட்டிகள் நிலவின. பல்வேறு பிளவுகளிற்கு உட்பட்டிருந்த மதங் களின் ஒருமைப்பாட்டினை வலியுறுத்தி எழுச்சி பெற்றதே விஜயநகரப் பேரரசு.

1. விஜயநகர மன்னர்கள் தெலுங்கு மொழி பேசுபவர்களாக இருந்தும் தமிழ் மொழியில் பெருமளவு இலக்கியங்கள் தோற்றம் பெற்றன.
2. தெலுங்கு மொழியை முதன்மைப் படுத்திய ஓர் ஆட்சி முறை தமிழ் நாட்டில் இடம் பெற்ற நிலையில் பெரும் தொகையான தெலுங்கர்கள் தமிழ் நாட்டில் குடியேறி னார்கள்.
3. சமஸ்கிருதமயப்படுத்துகையே இக்காலப் பண்பாடாகின்றமையினைக் காணலாம்.
4. முதன்முதலாக தமிழ் அன்னியப் பண்பா டொன்றின் மொழியாகியது.
5. சைவமரபில் மெய்கண்ட தேவரது சிவ ஞான போதத்தின் தோற்றம், அதனை ஒட்டிய ஏனைய சைவசித்தாந்த சாத்திரங்களின் தோற்றம்.
6. சித்தர் பாடல்களின் தோற்றம்.
7. மடங்கள் ஆதீனங்களின் சமய சமூகத் தொண்டு.
8. ஸ்தலபுராணங்களின் தோற்றம்.

9. உரைநூல்கள் தோன்றிய காலம்.

10. முருக வழிபாட்டின் எழுச்சி.

11. கட்டட சிற்ப ஓவியங்களின் வளர்ச்சி.

12. தத்துவ நூல்களின் தோற்றம்.

விஜயநகர நாயக்கர் காலப் பகுதியை சைவ சமயத்தின் வெற்றிக் காலம் எனக் கூறுவர் என்று K.A. நீலகண்ட சாஸ்திரி (பக். 445) கூறுவதுடன், 1200 - 1650 வரை பரந்திருந்த காலத் தமிழ் இலக்கிய வரலாற்றில் தமது கவனத்தைக் கவரும் காலம் எனவும் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது (பக். 443).

## சமய தத்துவ நூல்களின் தோற்றத்துக் கான பின்னணி

சங்ககாலம் தொட்டு வளர்ந்து வந்த சைவ வைஸ்ணவ மதங்கள் பல்லவர் காலப் பக்தி இலக்கியத்தின் மூலம் எழுச்சி பெற்றதுடன் விஜயநகர நாயக்கர் கால பகுதிக்கு முன்னரே இருமதங்களும் இணைந்து வளரத் தொடங்கின.

கி.பி. 788-820 வடதிருவாங்கூரில் காலடி என்னும் இடத்தில் தோன்றிய சங்கராச்சாரிய சுவாமிகள் உபநிடதங்களின் சுருக்கமாகிய பிரமசூத்திரத்திற்கு எழுதிய உரை முக்கியத்துவம் பெறுவதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு அத்வைத தத்துவம் தோன்றியது. அத்துவைதம் என்றாலே அது சங்கரரது அத்வைதத்தையே சிறப்பாகக் குறிக்கின்றது. உபநிடதங்களில் முக்கியமான பத்து உபநிட தங்களிற்கு தசோப நிடதங்களிற்கு சங்கரர் எழுதியுள்ள சங்கரரின் மாணவரான சுரேஸ்வரர் (விஸ்வரூபர்) சங்கரரிக் அடிப்படைக் கருத்துக்களை நைஸ்கர்மிச சித்தையில் (நிஸ் காமிக சித்தி) சுருக்கமான கூறுகிறார். சங்கரரது தைத்திரிய, பிருகதாரணிய உபநிடத பாசியங்களுக்கு வாத்திகமும் தெளிவுரை எழுதியுள்ளார். ஸ்ரீ இராமனுஜர் (1017-1137) பிரம்ம சூத்திரத்திற்கு ஸ்ரீபாசியம் எனப்படும். இதனை அடிப்படையாகக் கொண்டது இராமானுஜரது விசிட்டாத்தைவம் இராமானுஜரது பாசியத்தின் பிரதான உள்ளடக்கமாகப் போற்றப்படுகிறதாக ஆய்வாளர்கள் கூறுவர். இது srutapakasikkar ஆகும். மத்துவர் எழுதிய உரையின் அடிப்படையில் தோற்றம் பெற்றது மத்துவர் வேதாந்தம். விஜயநகர நாயக்கர் காலத்தை அறிகின்ற போது இத்தகைய தத்துவ நூல்கள் ஏற்கனவே தோற்றம் பெற்றிருந்ததனைக் காணலாம். இத் தத்துவங்களில் பின்னணியினை நோக்கும் போது சமூக அமைப்புப் பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். அதற்கிடையில் விஜயநகர நாயக்கர் காலப் பகுதியின் அத்துவைத சிந்தனையின் சென்நெறி பற்றிக் கவனிக்கும்போது சொரு பானந்தர் தத்துவராயரது நூல்களும் பாடல் களும் முக்கியம் பெறுகின்றன.

## தத்துவராயரும் அவரது நூல்களும்

கி.பி. 14ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 15இன் தொடக்கத்திலும் வாழ்ந்தவராகக் கருதப் படும் சொருபானந்தரின் சீடராக விளங்கியவர் தத்துவராயர். இவர் தமிழ் நாட்டில் அத்துவைத மரபு தமிழ்மொழி மூலம் காலூன்றக் காரண மாய் இருந்தவர். இக்காலப் பகுதியில் தோன்றிய இருதொகை நூல்கள் பற்றி சிறப்பாகக் கூறப்படுகிறது.

1. சிவப்பிரகாசப் பெரும் திரட்டு 2824 செய்யுள்.
2. குறும்திரட்டு அதில் அரைவாசிச் செய்யுள் களைக் கொண்டது.

இவ்விரு நூல்களுமே அக்கால சமய தத்துவஞான இலக்கியங்களாக பாதுகாத்து வைத்துள்ளனர் என்பதே ஆய்வாளர்களின் கருத்து. பெரும் திரட்டில் 147 நூல்களின் பெயர்கள் காணப்படுகின்றது. மேலும் குருவைப் போன்று தத்துவராயரும் சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் பாடல் களைச் செய்துள்ளனர்.

பாடுதுறை, மோகவதைப்பரணி (அதன் நடுப்பகுதியான சசிவர்ண போதம்) என்ற வேதாந்த சாத்திரத்தைப்பாடி குருவின் திரு வடியில் வைத்து வணங்கி நின்றபோது தத்துவராயரது திறமையை எண்ணி சீடராக ஏற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. இவற்றுடன் சிவப்பிரகாச வெண்பா (தத்துவ ராயர் முதலில் பாடியது) தமது குருவின் குருவான சிவப்பிரகாசரை துதித்துப் பாடியது தத்துவாமிர்தம் 137 பாடல்களைக் கொண்டது. குருவைத் தேடி பலமறுக்கும் ஞானம் பெற முயலும் செய்தியைக் கூறுவதன் மூலம் தம் குருவின் வரலாற்றைக் கூறுகிறார். ஈஸ்வர கீதை சிவனேயே பரம்பொருளாகக் கொண்டு பாடப்பட்ட வேதாந்த நூல்களாகக் கூறப் படுகிறது.

பாடுதுறையில் இடையிடையே தமது முன்னோர்களது நூற்பாடல்களையும் சேர்த் துள்ளார். அந்தவகையில் சைவசித்தாந்தப் பிரமாண நூலாகிய சிவானந்த மாலை இவ்வாறு சேர்க்கப்பட்டுள்ளது. தாலாட்டு முதல் அமிர்தசாசர வெண்பா வரையுள்ள 18 நூல்கள் அடங்கிய அடங்கன் மறை யெனும் தொகுதியையும் இயற்றினார்.

விஜயநகர நாயக்கர் காலப்பகுதியின் கல்வியைப் பொறுத்த மட்டில் வடமொழிக் கல்வியே முக்கியத்துவம் பெற்றிருந்ததுடன் வடமொழி உயர்தரக் கல்விக்காக தாராளமாக வழங்கப்பட்ட நன்கொடைகள் நீண்ட சிலாச னங்களிற் பதியப்பட்டுள்ளது. சில விதி விலக்குகள் இருந்தபோது சமஸ்கிருதக் கல்விப் பயிற்சி பிராமணர்களின் தனியுரிமையாகவே இருந்தது. நன்கொடைகள் மூலம் சமஸ்கிருதக் கல்விக்கு ஊக்கமளிக்கப்பட்டது.

நூல்களைப் பொறுத்தமட்டில் வடமொழியில் எழுதப்பட்டுள்ள தத்துவ நூல்கள் சாதாரண மக்களினால் புரிந்துகொள்ள முடியாதன வாகவே இருந்தன. ஆனால் அக்கால சமூக வரலாற்றுத் தேவைக்கேற்ற வகையில் வடமொழித் தத்துவ நூல்களை தமிழில் மொழி பெயர்க்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்த வகையில் நூல்கள் பல தமிழில் மொழியில் பெயர்க்கப்பட்டன. வடமொழி பகவத்கீதையை பட்டனார் தமிழில் மொழிபெயர்த்தது 545 பாடல் களில் பாடியுள்ளார். இது பரமார்த்த தரிசனம் என்ற பெயரைப் பெறுகிறது. அக்கால அத்துவைத அத்துவராய ஆதிசங்கரரது வேதாந்தத் தத்துவ கருத்துக்களை தமிழ் அத்துவைதமாகப் பாடியுள்ளார். தமிழ் நாட்டு இலக்கிய வரலாற்றிலும், தத்துவ வரலாற்றிலும் தத்துவராயருக்கு சிறப்பான இடம் உண்டு. இக்காலப்பகுதியின் கிருஷ்ணதேவராயரின் அரச சைவப்புலவராக ஹரிதாஸ் சைவம், வைஸ்ணவம் ஆகியவற்றை விளக்கும் இரு சமயவிளக்கம் என்ற நூலை எழுதியமை குறிப்பிடத்தக்கது.

1633 அளவில் மதுரை திருவேங்கட நாதர் என்பவர் அத்துவைத வேதாந்தத்தை விளக்கும் நூல் ஒன்றைச் செய்தார். இதற்கு மெஞ்ஞான விளக்கம் பிரபோத சத்திரேயம் என்ற பெயர் களினாலும் அழைக்கப்படுகின்றது. இது 48 கண்டங்களும், 2019 செய்யுட்களும் கொண்டது.

வடமொழி அத்துவைத வேதாந்த அறிஞர் களின் வேதாந்தமாகவே இருந்து வந்துள்ள நிலையில் தமிழ் நாட்டில் சாதாரண மக்களும் புரிந்துகொள்ளக் கூடிய நிலையில் பொது மக்கள் அத்துவைதத்தை தந்தவராக தத்துவ ராயரைக் கொள்ளலாம். இவருக்குப் பின் ஆவுடையக்கால் இத்தகைய வேதாந்தப் பாடல்களைப் பாடியதைக் காணலாம்.

அத்துவைத மதப்பிரசார நோக்கில் தாம் பாடிய நூல்களுக்கு சைவசித்தாந்த நூற் பெயர்களையே பெரிதும் இட்டுள்ளனர். தத்துவப்பிரகாஸம், தத்துவவிளக்கம், ஞான சாரம், வேதாந்தத்தீவிகை போன்றன குறிப் பிடத்தக்கன.

### தத்துவராயர் பேசும் அத்துவைதம்

பாடுதுறை எனும் நூலில் 138 தலைப்புக் களில் 1140 பாடல்கள் உள்ளன. தமிழ் பக்தி இலக்கிய வகைகள் பலவும் அவற்றிலும் அகத்துறை சார் பக்தி இலக்கிய வகைகளும் இடம்பெறுகின்றன. அகத்துறை சார் பாடல் களில் அடிப்படையில் சிறப்பாக அத்துவைதக் கருத்துக்குள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் சில குறி, பாங்கிற் குரைத்தல், தாய் வார்த்தை (தாய்க்கூற்று), தோழியுரைத்தல் (தோழிக்கூற்று) வரவுசாத்துதல், அருமை யுரைத்தல், வளவியுடன் படுத்தல், நெஞ்சிக்கு உரைத்தல் என்பன அகப்பொருள் உரைப்பென (பக். 71) அருள்பத்து, குயில், அன்னைப்பத்து, அச்சோ, சாளல், அம்மானை, ஊசல், பிரார்த் தனை, திருவெண்பாவை, திருப்பள்ளியெழுச்சி, திருவுந்தியார் போன்றன திருவாசக அமைப்பில் பாடப்படுகின்றன. (பக். 72)

குறத்தி என்ற தலைப்பில் வரும் பத்துப் பாடல்களும், அரையாட சேவையில் வரும் குறத்தி தன்னை அறிமுகம் செய்து கொள்ளும் இடத்தில் பாடும் பாடல்களைப் பின்பற்றிய தாகும். இந்த வகையில் குறத்திப் பாடல் மூலம் வெளிப்படுத்தும் அத்துவைதக் கருத்துக் களை முதலில் நோக்கலாம். தத்துவராயரது தத்துவக் கருத்துக்கள் விளக்கும் அத்தகைய பாடல்களில் ஒன்று,

***கேடுபடும் உடல் தனக்கு கீழாய கிழங்கு கல்லிக்***
***காடும் மலையும் கருதியிடும் குறத்தியையேன்***
***பாடும் மறையிற் பரப்பிரமமும் நானும்***
***கூடும் வகை தேடிக் குளித்திடும் குறத்தியேனே.***

என்று ஆன்மாவும் பிரமமும் ஒன்றென் பதையும் அவையிரண்டும் ஐக்கிய மானதையும் தேடும் குறத்தியாகத் தோன்றுகிறாள். சங்கரரது அத்துவைதத்திலே ஒன்றாகவுள்ள பிரமம் மாயைகாரணமாக உலகமாகத் தோன்றுவதுடன் அவித்தை காரணமாய் பல சீலர்களாகவும் தோன்றுகின்றது என்ற கருத்து அடிப்படைக் கோட்பாடாகவுள்ளது. சங்கரரது அத்துவைதத்தை விளங்கிக் கொள்ள வேண்டு மாயின் அவர் பேசும் மாயை பற்றிய கருத்து க்களை விளங்கிக் கொள்ள வேண்டும். அவ்வாறு அவரது தத்துவத்தில் மாயை முதன்மை பெறுவதன் காரணமாக அது அபயவாதம் என்ற பெயரைப் பெறுகின்றது. சங்கரரர் அத்துவைதத்தில் பொருள் ஒன்று என்ற கருத்தை அடிப்படையாக உள்ளதனால் பலவாகத் தெரிவதெல்லாம் தோற்றமே என்று அறியப்படுகிறது. சங்கரர் உலகம் உண்மை யல்ல அது ஒரு தோற்றம் என்பதனை விளக்க விவர்த்த வாதத்தை முன்வைக்கிறார். விவத்த வாதம் என்பது ஒரு பொருள் மாறாமல் இருந்தபடியே மாறிவிட்டது போல் தோன்றுவது. உதாரணமாகக் கயிறு பாம்பாகத் தோன்றுதல் இதற்கு சிறந்த உதாரணம். இக்கருத்தை உணர்த்தும் வகையில் தத்துவராயர் பாடல் ஒன்று அமைகிறது. பகலில் கயிறாகவும் இருட்டில் பாம்பாகவும் ஒரே பொருள் தோன்றுவது போல் உலகம் மாயை என்பதை சங்கரரது உதாரணத்தின் மூலம் விளக்குகிறார்.

***பார்க்கில் உலகம் பழுதை காண் அம்மானை***
***பாராத போது பழுதை பாம்பு அம்மானை***
***ஆற்கும் அறிய அரிது காண் அம்மானை***
***அற்றது இறையடிகண் மற்றிலை அம்மானை***

அதாவது இறைவனது பாதங்களைப் பற்றுவ தால் உலகம் பாம்பன்று கயிறு என்ற ஞானம் கிட்டும் என்கிறார். பாடுதுறையில் அமைந்த அம்மானைப் பாடல்கள் (2,1)

***மாயைக்கு வடிவுகொடுப்பார்காண் அம்மானை***
***மாயையால் உலகு அமைப்பார் காண்***
***அம்மானை***
***ஆயில் அறிவாய் இருப்பார் காண் அம்மானை***
***ஆயாதபோதுலகம் ஆவார்காண் அம்மானை.***

அத்துவைதக் கருத்துக்களில் முக்கியத்துவம் பெறும் மாயை பற்றி விளக்கும்போது

மாயைக்கு வடிவு கொடுப்பவராகவும் மாயை யால் உலகை ஆள்பவனாகவும் இறைவனே உள்ளான் எனவும் ஆராய்ந்து பார்த்தால் புலனாகும். அந்த இறைவன் அறிவுவடிவாய் இருப்பவன். அதனை அவன் அருளால் அறிந்து தெளியலாம். ஆயாத போது உலகம் ஆவர் காண் அம்மானை என்று முடிக்கின்றார். பிரமத்தின் இயல்பு சத், சித், ஆனந்தம், சித் என்பது conseiousness. தமிழ் அத்துவைத மரபென்பது சங்கரர் கூறும் வேதாந்தக் கருத்துக்களின் அடிப்படையில் தமிழ் சமூக அமைப்பிற்கேற்ப தமிழ் நாட்டு பக்திமரபை இணைத்துக்கொண்டே தத்துவ மரபாகும். இறைவனை இடையராக நினைத் துருகும் பத்தியே மெய்த்தவம் என்று போற்றப் படுகின்றது. தத்துவராயர் பாடுதுறையும் பாங்கிக்குரைத்தல் பாடல் 4இல்

***வேண்டாமை எனும் விழுச்செல்வம் பெற்றோம்***
***வேண்டாம் என்னும் பிறவி வேறுப் பெற்றோம்***
***ஆண்டவன் என்றுருகும் அன்பினைப் பெற்றோம்***
***ஐயோ இது தவம் சொல்லாய் பெண்ணே.***

தமிழ் அத்துவைதம் சிவன், திருமால் ஆகிய இரு தெய்வங்களையும் ஒன்றெனப் போற்றுவர். இந்த வகையில் ஆண்டாளின் வாரணமாயிரம் பாடல்களை உள்வாங்கி தத்துவராயர் பாடிய பாடல் ஒன்று இறைவன் குருவடிவாக வந்து அருட்பார்வை செலுத்தி தம் திருவடிகளை ஆன்மாக்களின் சென்னிமீது வைத்து பிறவிப் பிணி தீர்த்தல் பற்றிப் பேசுகிறது.

***எங்கள் பெருமான் இனையடி சென்னிமேல் வைத்துத்***
***தாங்கும் படி தந்து தாமரைக் கண்களால்***
***பொங்கும் பிறவிகள் போயகலப் பார்த்து***
***கங்குள் களியக் கனான் கண்டேன் தோழி நான்.***
***(பாடுதுறை கனாவுரத்தல் பாடல்)***

இறைவனது திருவடி நிழலை அடையும் போது ஆன்மா அறியாமை என்ற இருள் நிலையில் இருந்து விடுபட்டு விடுகிறது. பொங்கும் பிறவிகள் போயகலப் பார்த்து கங்குள் களியக் கனாக்கண்டேன் தோழி நான் தலைவி கூறுவது உயர்ந்த தத்துவத்தை அழகாக எளிமையாக விளக்குகிறார்.

திருமூலர் தம் பாடல்களில்,

***இருவினை நேரொப்பில் இன்னருட்சக்தி***
***குருவென வந்து குணம் பல நீக்கிக்***
***தரும் என நாணத்தால் தன் செயல் ஆற்றல்***
***திருமலந் தீந்து சிவனவனாமே.***

இவ்வாறு சிவனோடு இணையும் சாயுச்சிய முத்தியில் ஆன்மா மீண்டும் பிறவிக்கப்படாத பரமுத்தியைப் பெறுகிறது. ஞானத்தின் மூலமே இது அடையப்படுகிறது.

ஞானத்தால் வீடென்ற நான்மறைகள் நல்ல..... சொல்ல என வரும் சிவஞான சித்தியார் பாடல் கருத்தில் கொள்ளத்தக்கது. (மகளீர் விளையாட்டுக்களில் ஒன்று)

பாடுதுறையில் அமைந்த பத்துப் பாடல் 6இல் தமிழ் அத்வைதக் கருத்து நன்கு வெளிப் படுத்தப்படுகிறது. பிரம்மம் அகண்டாசாரமானது. எல்லைகளைக் கடந்தது. குருவின் திருவடிகள் தன் தலைமேல் வைக்கப்பட்டதால் ஞானம் பெற்று தாமும் தம்குருவும் எல்லைகடந்து பிரமமானதாகக் கூறுகிறது.

***தேசிகனாரடி சென்னிமேல் வைத்துத்***
***தேசகாரம் கெடப் பந்தாடநின்றேன்***
***வாசிலியில்லாவ நிவாயாவாயே பந்தே***
***மாயமயமாகிப் போவாயோ பந்தே.***

பந்தைப் பார்த்துக் கேட்கிறார் நானும் குருவும் பிரமமானோம் அந்த அறிவாக ஆவாயோ அல்லது மாயமாகிப் போவாயோ பந்தே என்று கேட்கிறார்.

மாணிக்கவாசகரது திருவுந்தியாரைப் பின்பற்றி தம் பாடுதுறையில் திருவுந்தியார் பாடல்களைச் சேர்த்துள்ளார். அவற்றுள் ஒன்பதாம் பாடல் வரபுபோக்கற்றோரும் என்று உந்திபெற பிறப்பிறப்றோரும் என்ற கருத்தை முன்வைக்கிறார்.